# குழுநிலைப்படுத்தாமை (DE-STREAMING) குறித்துக் குடும்பங்கள் தெரிந்து கொள்ள விரும்புவன யாவை

## குழுநிலைப்படுத்தாமை

| | |
|---|---|
| **குழுநிலைப்படுத்தல் (streaming) என்றால் என்ன?** | • குழுநிலைப்படுத்தல் என்பது மாணவர்களை செயன்முறை சாராக் கல்வி (Academic), செயன்முறை சார்ந்த கல்வி (Applied) மற்றும் தனித்துவமாகத் தயாரிக்கப்படும் கல்வித் திட்டம் (Locally Developed) என வெவ்வேறு பாட வகைகளின் அடிப்படையில் பிரிப்பதாகும். |
| **குழுநிலைப்படுத்தாமை என்றால் என்ன?** | • பாடசாலைகள் இனிமேல் செயன்முறை சார்ந்த கல்வித்திட்ட முறையில் பாடநெறிகளை வழங்காது என்பதே குழுநிலைப்படுத்தாமை என்பதன் பொருளாகும். |
| **பாடநெறிகள் ஏன் இனிமேல் குழுரீதியாகப் பிரிக்கப்படப்போவதில்லை?** | • குழுரீதியாகப் பிரிக்கப்படாத கற்கை முறையானது, மாணவர்களில் அதிலும் குறிப்பாக ஒதுக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களில், சிறந்த பெறுபேறுகளை ஏற்படுத்துகின்றது என்று ஆராய்ச்சி ஒன்று எடுத்துக் காட்டுகின்றது. |
| **சிறப்புக் கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்கள் எவ்வாறு ஆதரிக்கப்படுவார்கள்?** | • சிறப்புக் கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்களுக்கான தனிப்பட்ட கல்வித் திட்டத்தை ஆசிரியர்கள் செயற்படுத்துவார்கள்.<br>• உயர்தரப் பாடசாலையில், இத்தேவைகளைக் கொண்ட மாணவர்களுக்கு ஆதரவளிப்பதற்கு, சிறப்புக் கல்வி உதவி ஆசிரியர்களுடன் இணைந்து ஏனைய ஆசிரியர்கள் தொடர்ந்து பணியாற்றுவார்கள். |

## தனித்துவமாகத் தயாரிக்கப்படும் பாடநெறிகள்

| | |
|---|---|
| **தனித்துவமாகத் தயாரிக்கப்படும் (அல்லது அத்தியாவசியமான) பாடநெறிகள் யாவை?** | • 8 ம் வகுப்பில் கணிசமாக மாற்றியமைக்கப்பட்ட நிரலாக்கத்தைப் பெற்று வரும் மாணவர்களின் தேவைகளைத் தனித்துவமாகத் தயாரிக்கப்படும் பாடத்திட்டங்கள் ஆதரிக்கின்றன.<br>• தனித்துவமாகத் தயாரிக்கப்படும் பாடநெறிகள், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் மற்றும்/அல்லது சரித்திரம் ஆகிய பாடங்களில், 9 மற்றும் 10 ஆம் வகுப்புத் தர நிலைகளில் வழங்கப்படுகின்றன.<br>• ஏனைய படிப்புகள் மூலம் பூர்த்தி செய்யப்படாத கல்வி மற்றும்/அல்லது தொழில் தயார்ப்படுத்தல் தேவைகளுக்குத், தனித்துவமாகத் தயாரிக்கப்படும் பாடநெறிகள் வாய்ப்பளிக்கின்றன.<br>• கல்லூரி மற்றும் பல்கலைக்கழகத்தில் உள்ள பாடத்திட்டங்கள் மற்றும் சில தொழிற் பயிற்சித் திட்டங்கள் ஆகியவற்றின் அனுமதிக்கு இந்தப் பாதையில் உள்ள படிப்புகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. |
| **தனித்துவமாகத் தயாரிக்கப்படும் பாடத்திட்டத்துக்கு எனது பிள்ளை பரிந்துரைக்கப்படுவது ஏன்?** | தனித்துவமாகத் தயாரிக்கப்படும் பாடத்திட்டத்தை எடுக்கும்படி பரிந்துரைக்கப்படும் மாணவர்கள்:<br>• 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் கணிசமாக மாற்றியமைக்கப்பட்ட பாடத்திட்டங்களைக் கற்றுக் கொண்டிருக்கக்கூடும்.<br>• வகுப்புத் தரநிலையில் எதிர்பார்க்கப்படும் அளவு வேலையைச் செய்யாதவராக அத்துடன் மேலதிகமான உதவி தேவைப்படுபவராக இருக்கக்கூடும். |
| **தனித்துவமாகத் தயாரிக்கப்படும் பாடத்திட்டத்திற்கு எனது பிள்ளை பரிந்துரைக்கப்படுகின்றாரா என்று அறிவதற்கு என்ன கேள்விகளை நான் கேட்க வேண்டும்?** | • எந்த வகுப்புத்தர நிலையில் எனது பிள்ளை மாற்றங்கள் இல்லாமல் சுயாதீனமாக வேலை செய்கின்றார்?<br>• எனது பிள்ளையின் தற்போதைய கல்வித்தர நிலை என்ன?<br>• எனது பிள்ளை மாற்றங்களுடன் (வகுப்புத் தரநிலை எதிர்பார்ப்புகளில் செய்யப்பட்ட மாற்றங்கள்) அல்லது உதவி வசதிகளுடன் (தரநிலை எதிர்பார்ப்புகளை மாற்றாத உதவிகள்) கல்வி கற்கின்றாரா? |
| **தனித்துவமாகத் தயாரிக்கப்படும் பாடத்திட்டங்களை எடுத்தால் மாணவர்களுக்கு எவ்விதமான தெரிவுகள் (பயிற்சி, கல்லூரி, பல்கலைக்கழகம், பணியிடங்கள்) எதிர்காலத்தில் உள்ளன?** | • தனித்துவமாகத் தயாரிக்கப்படும் பாடத்திட்டங்களை 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளில் முடிக்கும் மாணவர்கள் நேரடியாக 11 ஆம் வகுப்புப் பணியிடப் படிப்புகளுக்குச் செல்லத் தயாராகி வருகின்றனர், இது உயர்நிலைப் பாடசாலைக்குப் பிறகு வேலைவாய்ப்பு மற்றும்/அல்லது தொழிற்பயிற்சி வாய்ப்புகளுக்கு வழிவகுக்கின்றது.<br>• தனித்துவமாகத் தயாரிக்கப்படும் பாடத்திட்டங்களை 9 ஆம் வகுப்பில் வெற்றிகரமாக முடிக்கும் மாணவர்கள், அதே 9 ஆம் வகுப்புப் பாடத்தைக் குழுரீதியாகப் பிரிக்கப்படாத பாடங்கள் போன்ற வேறு பாட வகைகளில் எடுக்கலாம். இந்தப் பாதை பின்னர் கல்லூரி, தொழிற்பயிற்சி அல்லது பல்கலைக்கழகப் படிப்புகள் மற்றும் 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளின் பாடத்திட்டங்களுக்கு வழிவகுக்கும். |

## 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளின் மாணவர்களுக்குரிய தெரிவுகள் எவையாக இருக்கும்?

| | 2021-2022 | 2022-2023 | 2023-2024 மற்றும் அதற்குப் பின்னர் |
|---|---|---|---|
| **ஆங்கிலம்** | வகுப்பு 9<br>• தனித்துவமாகத் தயாரிக்கப்படுவது<br>• செயன்முறை சார்ந்தது<br>• செயன்முறை சாராக் கல்வி<br>வகுப்பு 10<br>• தனித்துவமாகத் தயாரிக்கப்படுவது<br>• செயன்முறை சார்ந்தது<br>• செயன்முறை சாராக் கல்வி | வகுப்பு 9<br>• தனித்துவமாகத் தயாரிக்கப்படுவது<br>• செயன்முறை சாராக் கல்வி<br>வகுப்பு 10<br>• தனித்துவமாகத் தயாரிக்கப்படுவது<br>• செயன்முறை சார்ந்தது<br>• செயன்முறை சாராக் கல்வி | வகுப்பு 9<br>• தனித்துவமாகத் தயாரிக்கப்படுவது<br>• செயன்முறை சாராக் கல்வி<br>வகுப்பு 10<br>• தனித்துவமாகத் தயாரிக்கப்படுவது<br>• செயன்முறை சாராக் கல்வி |
| **பிரெஞ்சு** | வகுப்பு 9<br>• திறந்த நிலை<br>• செயன்முறை சார்ந்தது<br>• செயன்முறை சாராக் கல்வி<br>வகுப்பு 10<br>• செயன்முறை சார்ந்தது<br>• செயன்முறை சாராக் கல்வி | வகுப்பு 9<br>• திறந்த நிலை<br>• செயன்முறை சாராக் கல்வி<br>வகுப்பு 10<br>• செயன்முறை சார்ந்தது<br>• செயன்முறை சாராக் கல்வி | வகுப்பு 9<br>• திறந்த நிலை<br>• செயன்முறை சாராக் கல்வி<br>வகுப்பு 10<br>• செயன்முறை சாராக் கல்வி |
| **புவியியல்** | வகுப்பு 9<br>• செயன்முறை சார்ந்தது<br>• செயன்முறை சாராக் கல்வி | வகுப்பு 9<br>• செயன்முறை சாராக் கல்வி | வகுப்பு 9<br>• செயன்முறை சாராக் கல்வி |
| **சரித்திரம்** | வகுப்பு 10<br>• தனித்துவமாகத் தயாரிக்கப்படுவது<br>• செயன்முறை சார்ந்தது<br>• செயன்முறை சாராக் கல்வி | வகுப்பு 10<br>• தனித்துவமாகத் தயாரிக்கப்படுவது<br>• செயன்முறை சாராக் கல்வி | வகுப்பு 10<br>• தனித்துவமாகத் தயாரிக்கப்படுவது<br>• செயன்முறை சாராக் கல்வி |
| **கணிதம்** | வகுப்பு 9<br>• தனித்துவமாகத் தயாரிக்கப்படுவது<br>• குழுநிலைப்படுத்தாத கணிதம்<br>வகுப்பு 10<br>• தனித்துவமாகத் தயாரிக்கப்படுவது<br>• செயன்முறை சார்ந்தது<br>• செயன்முறை சாராக் கல்வி | வகுப்பு 9<br>• தனித்துவமாகத் தயாரிக்கப்படுவது<br>• குழுநிலைப்படுத்தாத கணிதம்<br>வகுப்பு 10<br>• தனித்துவமாகத் தயாரிக்கப்படுவது<br>• செயன்முறை சாராக் கல்வி | வகுப்பு 9<br>• தனித்துவமாகத் தயாரிக்கப்படுவது<br>• குழுநிலைப்படுத்தாத கணிதம்<br>வகுப்பு 10<br>• தனித்துவமாகத் தயாரிக்கப்படுவது<br>• செயன்முறை சாராக் கல்வி |
| **விஞ்ஞானம்** | வகுப்பு 9<br>• தனித்துவமாகத் தயாரிக்கப்படுவது<br>• செயன்முறை சார்ந்தது<br>• செயன்முறை சாராக் கல்வி<br>வகுப்பு 10<br>• தனித்துவமாகத் தயாரிக்கப்படுவது<br>• செயன்முறை சார்ந்தது<br>• செயன்முறை சாராக் கல்வி | வகுப்பு 9<br>• தனித்துவமாகத் தயாரிக்கப்படுவது<br>• குழுநிலை-அற்ற விஞ்ஞானம்<br>வகுப்பு 10<br>• தனித்துவமாகத் தயாரிக்கப்படுவது<br>• செயன்முறை சார்ந்தது<br>• செயன்முறை சாராக் கல்வி | வகுப்பு 9<br>• தனித்துவமாகத் தயாரிக்கப்படுவது<br>• குழுநிலை-அற்ற விஞ்ஞானம்<br>வகுப்பு 10<br>• தனித்துவமாகத் தயாரிக்கப்படுவது<br>• செயன்முறை சாராக் கல்வி |